Registered with the Registrar of News Paper
For India under R.N.I. 11967/'67

வருட சந்தா ரூ.1/-

வருகை யின் தூதன்

பரிசுத்த வேதாகமம்

Vol. 69 அவர்கள் கனியைப் பூமியிலிராதபடி நீர் அழித்து, அவர்கள் ..... ஒழியப் பண்ணுவீர். சங்.21:10 டிசம்பர் 2023 No.12

வெதுவெதுப்பான நிலை குறித்த ஒரு உறுதியான எச்சரிப்பு

An earnest warning about lukewarmness

Charles H. Spurgeon

வேதபாட பகுதி வெளி.3:14-21

ஒரு சபைதான் பெற்றிருக்கும் கீர்த்தியை விட மிகத் தாழ்வான நிலைக்கு விழுந்து விடலாம்

உன் கிரியைகளை அறிந்திருக்கி றேனென்று எச்சரிப்பு ஆரம்பிக்கிறது. இதன் கருத்து, "பிறர் உன்னைக் குறித்து சரியாக அறியவில்லை. மக்கள் உன்னைக் குறித்து உனது தகுதிக்கு மிஞ்சி எண்ணுகி றார்கள் உன்னைக் குறித்தே உனக்குத் தெரியவில்லை. உனது கிரியைகள் மேலா னது என்று நீ எண்ணுகிறாய், ஆனால் அவை வித்தியாசமானவை என நான் அறிவேன்". தமது சபையின் கிரியை களை தேவன் ஆராய்ந்து பார்க்கிறார். அவர் தமது சபையை அதின் புறச்செயல் களையல்ல, அதின் உள்ளான பரிசுத் தத்தை கவனிக்கிறார். அவர் இருதயங் களை ஆராய்ந்து பார்க்கிறவர். அவரது கருத்தும் நமது கருத்தும் ஒன்றாயிருக்க வேண்டும். மனிதர் கடந்த கால அனுபவங்களில் பெருமைப்பட்டுக் கொண்டு இன்றைய மரித்த நிலையை உணராதிருக்கின்றனர்.

இங்கு விவரிக்கப்படும் நிலை நீர் விசாரமும், சீரத்தையின்மையுமாகும்

அவர்கள் குளிராயிருக்கவில்லை, அதே வேளையில் அனலாகவுமிருக்க வில்லை. அவர்கள் அவபக்தர்களல்ல, ஆயினும் உத்தம விசுவாசிகளுமல்ல. அவர்கள் சுவிசேஷத்திற்கு எதிர்த்து நிற்கவில்லை எனினும் அதைப் பாதுகாக் கவில்லை. அவர்கள் தீமை செய்ய வில்லை நன்மை செய்யவுமில்லை. சன்மார்க்க நெறியில் அவர்கள் புகழற்ற வர்களல்ல, ஆயினும் தூய்மையில் உயர்ந்தவர்களுமல்ல. அவர்கள் மதப் பற்றற்றவர்களல்ல, ஆனால் உத்வேகத் துடன் பரிசுத்தமாக வாழவில்லை.

அவர்களில் நல்ல காரியங்கள் காணப்பட்டன, ஆனால் அவை நன்கு பராமரிக்கப்படவில்லை. ஜெபக் கூடுகை கள் இருந்த போதிலும் அதை பயன்படுத் தினவர்கள் ஒரு சிலரே.

சில சபைகள் கல்விக் கூடங்களை யும், வேதபாட சாலைகளையும் நடத்தியும் அவைகளால் எந்த நன்மை யும் ஏற்படுவதில்லை. ஏனெனில் அவை அரைமனதோடும், அரை உயிரோடும் நடத்தப்படுகின்றன.

சரியான காரியத்தையே செய்த போதும் அதனை முழுமனதோடும், முழு பலத்தோடும், முழு ஆத்துமாவோடும் செய்யவில்லை. அவர்கள் தங்கள் செயல் களையும் ஜெபக்கூடுகைகளையும் விட்டு விடும் அளவுக்குக் குளிராயிருக்க வில்லை. சுவிசேஷத்தை அசட்டை செய்யவுமில்லை. அப்படியானால் அவர் களை உணர்த்தி மனந்திரும்புதலுக்கு வழி நடத்தியிருக்கலாம். ஆனால் அவர்கள் சத்தியத்திற்காகவும் மனந் திரும்புவதற்காகவும், பரிசுத்த வாழ் விற்காகவும் அனலுள்ளவர்களாகவும், பாவத்தைச் சுட்டெரிக்கும் வெப்ப முடையவர்களாகவும், சாத்தானை கோபப்படுத்த உற்சாகமுடையவர் களாகவும், தேவனுடைய பலிபீடத் திற்கு முன்பாக தங்களை ஜீவனுள்ள பலியாகவும் ஒப்படைக்கக் கூடியவர் களாகவும் இருக்க முடியவில்லை. அவர்கள் குளிராகவோ அனலாகவோ இருக்கவில்லை.

இத்தகைய நிலையில் லவோதிக் கேயா சபை தன்னைக் குறித்து நான் ஐசுவரியவானென்றும், திரவிய சம்பன்ன னென்றும், எனக்கு ஒரு குறைவுமில்லை யென்றும் சொல்லுகிறது. சபை அங்கத்தி னர்களும் எல்லாம் நன்றாகவேயிருக் கிறது என மார்தட்டுகிறார்கள். இந்த நிலைமை நம்பிக்கையற்றது.

இந்நிலையிலிருந்து மக்களைத் திருப்புவது கடினமானது. குளிர் நம்மை நடுங்கச் செய்யும். வெப்பம் நம்மை வேதனைப்படுத்தும். எனவே இரண் டிற்கும் இடைப்பட்ட நிலை சொகு சானது. மனித இயற்கைக்கு இது பொருத்தமானது. உலகம் இத்தகைய சபையோடு சமாதானமாயிருக்கிறது, சபையும் சந்தோஷமாயிருக்கிறது. உலகத் தோடு ஒத்துப் போவதற்கு ஒரு எல்லை யுண்டு. சில விருப்பங்களை சபை விட வேண்டும். நிர்விசாரம் சபைகளை விழச் செய்கிறது. லௌகீக பேச்சாளர்கள் மக்களை இரையாக்குகிறார்கள். மக்கள் பாவ இன்பங்களையும் பரிசுத்த வாழ் வின் கனத்தையும் ஒரே வேளையில் அனுபவிக்க விரும்புகிறார்கள். இப் போது அதிக உழைப்பு தேவைப்படுவ தில்லை, அதிமாகக் கொடுக்கவும் ஜெபிக்கவும் தேவையில்லை. வாழ்வு எளிதாகி விடுகிறது ஆனால் பாவம் இடம் பெறும் போது உண்மையான தேவ பயம் இருப்பதில்லை.

இந்த நிர்விசாரம் சுயதிருப்தியை ஏற்படுத்துகிறது

புலம்ப வேண்டிய மக்கள் களிகூருகிறார்கள். துயரத்தின் அடையா ளத்தைக் காண்பிக்க வேண்டியவர்கள் வெற்றிக் கொடியைக் காண்பிக்கிறார் கள். "நாங்கள் ஐசுவரிய சம்பன்னர், எங்களுக்கு அனேகப் பள்ளிகளிருக் கின்றன, நாங்கள் எல்லா வகையிலும் வளர்ந்து வருகிறோம், எங்களுக்குக் குறைவேயில்லை..." என்கிறோம். ஆனால் ஆவிக்குரிய தேவைகள் அனேகம் என்பதை மறந்து விடுகிறோம். "நான் பின்மாறி விட்டேன், நான் குறைவுள்ள வன், இன்னும் நான் கிறிஸ்துவுக்காக எரிந்து பிரகாசிக்க வேண்டும்" என்று புலம்புகிற சபையை தேவன் ஆசீர்வதிப் பார். ஆனால் தன்னைக் குறித்து பெருமைப்படுகிற சபையின் நிலை பயங்கரமானது. தான் ஐசுவரிய சம்பன்ன னென்று எண்ணும் சபையின் நிலை தேவ பார்வையில் வெறுமையானது. தனி ஜெபத்தில் குறைவு, சபையின் பெல வீனம், என கிறிஸ்துவோடுள்ள ஐக்கியம் குறைவுபடும் போது மார்க்கத்தின் உயிர் இழந்து போகிறது. ஆயினும் வெளித் தோற்றத்தில் ஆசீர்வாதமானதாகத் தோற்றமளிக்கிறது.

இந்த லவோதிக்கேயா சபை கர்த்தரைத் துரத்தி விட்டது

'இதோ நான் வாசற்படியில் நின்று தட்டுகிறேன்' என்று இந்த பகுதி நமக்குக் கூறுகிறது. உண்மையாகவே செழித்து வளரும் ஒரு சபையில் கர்த்தர் வெளியே நிற்க மாட்டார். அவர் நம்மோடு இருந்தால் தமது ஜனங்களுக் குத் தம்மை வெளிப்படுத்துவார். அவரது பிரசன்னம் நமது ஆராதனைகளை ஆவிக்குரியதாகவும் உயிரோட்டமுள்ள தாகவும் ஆக்கும். அவர் தமது ஊழியக் காரரை பந்தியில் சந்தித்து தமது சரீரத்தையும், இரத்தத்தையும் விருந்தாக

(5-ம் பக்கம் பார்க்க)

வாசகர் கவனத்திற்கு

வங்கி வழியாக காணிக்கை அனுப்புகிற வாசகர்கள் தகவல் தராவிட்டால், வாசகர் பெயர் எங்களுக்கு தெரியாதபடியால், ரசீது அனுப்ப இயலாது, பற்றுச்சீட்டையும் அனுப்ப இயலாது.

உடனே எங்களுக்கு SMS or Whatsapp அனுப்புங்கள்

Mobile : **95432 21008**

Whatsapp : **9489740295**

e-mail:varukayinthoothan@hotmail.com

வருகையின் தூதன்

ஆசிரியர்:
வெஸ்லி தேவதாசன்
(Former Editor : S.Devadason 1955 - 1999)

Advisory Board : D. StanlyJones, S. Thomas Ganesh, Christy Samuel, Christinal P.Mony

2023 டிசம்பர் மாத தூதனுக்காக என் தேவனை நன்றியோடும், வெகு மனத்தாழ்மையோடும் துதிக்கிறேன்.

2023-ம் ஆண்டு முழுவதும் தேவனுடைய பிள்ளைகள் அனுப்பிய அன்பின் காணிக்கைகளுக்காக கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன். இருதயத்திலிருந்து உங்களை வாழ்த்தி நன்றி கூறுகிறேன். காணிக்கை பற்றி வேத புஸ்தகம் கூறும் சில உண்மைகளை மாத்திரம் கீழே குறிப்பிடுகிறேன்.

I. அங்கிகரிக்கப்பட்ட காணிக்கை

ஆபேலும் தன் மந்தையின் தலையீற்றுகளிலும் அவைகளில் கொழுமையானவைகளிலும் சிலவற்றைக் கொண்டு வந்தான், ஆபேலையும் அவன் காணிக்கையையும் கர்த்தர் அங்கிகரித்தார் ஆதி.4:4.

ஆங்கிலத்தில் The LORD had respected Abel and his OFFERING Genesis 4:4.

II. மனப்பூர்வமான காணிக்கை

இப்படி மனப்பூர்வமாய்க் கொடுக்கும் திராணி உண்டாவதற்கு நான் எம்மாத்திரம்? என் ஜனங்கள் எம்மாத்திரம்? எல்லாம் உம்மால் உண்டானது; உமது கரத்திலே வாங்கி உமக்குக் கொடுத்தோம்.

என் தேவனே, நீர் இருதயத்தைச் சோதித்து, உத்தம குணத்தில் பிரியமாயிருக்கிறீர் என்பதை அறிவேன்; இவையெல்லாம் நான் உத்தம இருதயத்தோடே மனப்பூர்வமாய்க் கொடுத்தேன்; இப்பொழுது இங்கேயிருக்கிற உம்முடைய ஜனமும் உமக்கு மனப்பூர்வமாய்க் கொடுக்கிறதைக் கண்டு சந்தோஷித்தேன் 1நாளா. 29:14,17.

III. தசமபாக காணிக்கை

என் ஆலயத்தில் ஆகாரம் உண்டாயிருக்கும்படிக்கு தசமபாகங்களையெல்லாம் பண்டசாலையிலே கொண்டு வாருங்கள்; அப்பொழுது நான் வானத்தின் பலகணிகளைத் திறந்து, இடங்கொள்ளாமல் போகுமட்டும் உங்கள் மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்க மாட்டேனோவென்று அதினால் என்னைச் சோதித்துப் பாருங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் மல்கி.3:10.

IV. சுகந்த வாசனையான காணிக்கை

எல்லாம் எனக்குக் கிடைத்தது, பரிபூரணமும் உண்டாயிருக்கிறது; உங்களால் அனுப்பப்பட்டவைகளைச் சுகந்த வாசனையும், தேவனுக்குப் பிரியமான உகந்த பலியுமாக எப்பாப்பிரோதித்துவின் கையில் வரப்பற்றிக் கொண்டபடியால் நான் திருப்தியடைந்திருக்கிறேன். பிலி.4:18.

V. தரித்திரத்தில் காணிக்கை

அவர்கள் மிகுந்த உபத்திரவத்தினாலே சோதிக்கப்படுகையில், கொடிய தரித்திரமுடையவர்களாயிருந்தும், தங்கள் பரிபூரண சந்தோஷத்தினாலே மிகுந்த உதாரத்துவமாய்க் கொடுத்தார்கள் 2 கொரி.8:2.

ஒரு அன்பான சகோதரி, ஆசிரியை அநேக ஆண்டுகளாக **மாதந்தோறும்** ரூபாய் 300 அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். ஒரு அருமையான சகோதரி, ஆசிரியை (ஓய்வு) அவர்களும் அநேக ஆண்டுகளாக **மாதந்தோறும்** ரூபாய் 50 அனுப்புகிறார்கள். அவர்களுக்காக தேவனை துதிக்கிறேன்.

நம்முடைய வீட்டு வேலைகளுக்கு நாம் அழைக்கும் பெயின்டர், கார்பெண்டர், கொத்தனார், தண்ணீர் வேலை, மின்சார வேலை போன்றவற்றிற்கு **ஒரு நாள் சம்பளம்** ரூபாய் 800 முதல் 1200 வரை கொடுக்கும் தேவனுடைய பிள்ளைகள், ஆண்டவருடைய ஊழியத்திற்கு ஒரு ஆண்டு காணிக்கை ரூபாய் 100, 200 என்று அனுப்புவதை குறித்து நிதானித்து பார்க்குபடி கேட்டுக்கொள்கிறேன்.(அன்பான வாசகருக்கு பார்ககவும்)

அன்பான வாசகருக்கு . . . .

1. **மாதந்தோறும்** சில தேவ பிள்ளைகள் (வெகு சிலர் மட்டுமே) ரூபாய் 50,100,200,300,500 அதற்கும் அதிகமாக அனுப்பு கிறார்கள். நீங்களும் **மாதந்தோறும்** தாங்குங்கள்.
2. **மாதந்தோறும்** காகிதம், அச்சு கூலி, தபால் செலவுகள், வேலைக்கூலி, சம்பளம் கொடுக்கப்பட வேண்டியதால், எல்லா கிறிஸ்தவ ஊழியங்களையும் போல வருகையின் தூதன் ஊழியத்தையும் **மாதந்தோறும்** தாங்குங்கள்.
3. **மாதந்தோறும்** ரூபாய் 100 அனுப்பிக் கொண்டிருந்த ஒரு சகோதரி, வயதின் காரணமாக வருடத்திற்கு ஒரு முறை ரூபாய் 1200 அனுப்புகிறார்கள். மாதந்தோறும் தபாலில்/வங்கி வழியாக அனுப்ப இயலாத தேவ பிள்ளைகள் வருடத்திற்கு ஒரு முறையாவது குறைந்த பட்சம் **ரூபாய் 500** அனுப்புங்கள்.

தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார் யோவா.3:16.

அன்பு கூராமல் கொடுக்க முடியும்
ஆனால் கொடுக்காமல் அன்புகூர முடியாது.

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.
தேவ கிருபை உங்களோடிருப்பதாக.

உங்கள் அன்பு சகோதரன்,
வெஸ்லி தேவதாசன்.

"ஊழியர் செய்யக் கூடாதவை"

"**ஊழியர் செய்யக் கூடாதவை**" என்ற செய்தி **BYM** மிஷனெரி ஊழிய ஸ்தாபகர் எழுதியதாகும். இவர் சிறந்த வேத பண்டிதர். இந்த செய்தியை, அதிக எண்ணிக்கையில் அச்சிடப்படும் "**ஜாமக்காரன்**" என்ற பத்திரிகையிலும், "**மேய்ப்பனின் கோல்**" (இது கிறிஸ்தவ ஊழியர்களுக்கு போதிக்கும் இதழ்) பத்திரிகையிலும் வெளியிட்டிருக்கிறார்கள். இந்த செய்தி முழுவதையும் நம்முடைய பத்திரிகையில் அச்சிட இயலாது என்பதால் 10 தலைப்புகளில் ஒரு தலைப்பை மாத்திரம் தூதனில் வெளியிடுகிறேன்.

உங்களை விளம்பரப்படுத்தாதீர்கள்

அவர் பெருகவும் நான் சிறுகவும் வேண்டும் என்றான் திரு முழுக்கினன் யோவான் (யோவா.3:30) அவனைக் குறித்து இயேசு பெண்களிடத்திலே பிறந்தவர்களில் யோவான் ஸ்நானனைவிடப் பெரியவன் ஒருவனும் எழும்பினதில்லை என்றார் (மத்.11:11) அட்டை முதல் அட்டை வரை ஒரு தனி நபரையே விளம்பரப்படுத்தும் சில பத்திரிகைகளைப் பார்த்துச் சலித்து விட்டது. திரைப்பட நடிகரைப் போல சுவிசேஷகர் எல்லாக் கோணங்களிலும் புகைப்படமெடுக்கப்படுகிறார். ஒரு பத்திரிக்கையை வாசித்தபின் அல்லது ஒரு செய்தியைக் கேட்டபின் நமது இரட்சகர் எவ்வளவு அதிசயமானவர் என்றுதான் பிரமிக்க வேண்டுமே தவிர இவர் எவ்வளவு வல்லமையான பிரசங்கி

(3-ம் பக்கம் பார்க்க)

அறிவிப்புகள்

கடிதம், மணியாடர், கொரியர் அனுப்ப வேண்டிய முகவரி:

வருகையின் தூதன்
நியுபோர்ட் தெரு,
நாகர்கோவில் – 629 001.
Ph. : 95432 21008

VARUKAYIN THOOTHAN
Newport Street,
Nagercoil-629 001.
Ph. : 95432 21008

காசோலை *(Cheque & Draft)*
வெஸ்லி தேவதாசன் (WESLEY DEVADASON)
என்ற பெயர் மட்டும் எழுதி அனுப்புங்கள்

வருகையின் தூதன் பத்திரிகை பணி
A/c. Name : **WESLEY DEVADASON**, A/c. No. : **2131010118439**
Punjab National Bank, Nagercoil -1. IFSC Code : **PUNB0213120**

வருகையின் தூதன் உபவாச ஊழியம்
A/c. Name : **WESLEY DEVADASON**, A/c. No. : **370601000002557**
I.O.B., Nagercoil-1 IFSC Code : **IOBA0000063**

வருகையின் தூதன் முன்னேற்றப்பணி
A/c. Name : **WESLEY DEVADASON**, A/c. No. : **61822200136904**
Canara Bank, Ngl-1 IFSC Code : **CNRB0001110**

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

யார் என்று விமர்சிக்க வழியிருக்கக் கூடாது. அப்படியே ரெவரண்டு ரைட் ரெவரண்டு என்ற பட்டங்களையும் அகற்றுங்கள். ரெவரண்டு என்ற ஆங்கில வேதாகமச் சொல் தமிழில் பயங்கர மான என்று மொழியாக்கம் செய்யப் பட்டுள்ளது. கர்த்தருடைய நாமமே பரிசுத்தமும் பயங்கரமுமானது. *(சங்.111:9)* மிகப் பெரிய இந்திய அப்போஸ்தலரில் ஒருவர் எளிய முறையில் சகோதரன் பத்ஸ் சிங் என்றே அழைக்கப்பட்டார். நீங்கள் எல்லாரும் சகோதரராயிருக் கிறீர்கள் என்றார் இயேசு. *(மத்.23:8)* ஐம்பது அல்லது நூறு ரூபாய்க்கெல்லாம் டாக்டர் பட்டம் கொடுக்கும் நிறுவனங்கள் உண்டு. பட்டங்கள் அவ்வளவு மலிவாகி விட்டன.

❄ ❄ ❄

வருகையின் தூதன் முன்னாள் ஆசிரியர், காலஞ்சென்ற எனது தகப்ப னார் பாஸ்டர் S. தேவதாசன்*(13-08-1905 -13-11-2005)* அவர்கள் எழுதிய ஒரு செய்தியை தொடர்ந்து அச்சிடுகிறேன்.

பெர்கமு சபைக்கு ஆவியானவரின் செய்தி

(வெளி.2:12–17–ல் காணும் இச்செய்தியை ஜெபத்தோடு படித்து விட்டு இக்கட்டுரையைப் படியுங்கள்.)

தீர்க்கதரிசன முறையில் பெர்கமு கி.பி. 313 முதல் 606 வரையுள்ள சபையைக் குறிக்கும். சாத்தான் 250 ஆண்டு காலமாய் துன்புறுத்தியும், டயோக்கிளீஷியன் மூலம் 10 ஆண்டுகள் தொடர்பாய் வாதித்தும், கிறிஸ்துவின் சபை பக்தி வைராக்கியத்திலும் பரிசுத் தத்திலும் விசுவாசத்திலும் வளர்ந்த தேயன்றி அழிந்து போகவில்லை. துன்பத்தின் மூலம் அதை அழிக்கமுடியா தென்று கண்ட சத்துரு இன்பத்தின் மூலம் அதைக் கெடுக்கத் திட்ட மிட்டான். வெளியே சத்துருக்களை எழுப்பி அபஜெயமடைந்த சாத்தான், உள்ளேயே சத்துருக்களை எழுப்பி சபைத் தலைவர்களைக் கொண்டே சபையைச் சீர்கேடடையச் செய்தான்.

கி.பி. 312-ல் கான்ஸ்டன்டைன் ரோமை சாம்ராஜ்யத்தின் அதிகாரத் தைப் பெற்றான். அவன் அதிகாரத்தில் உறுதிப்பட வேண்டுமானால் ஒரு பலத்த எதிரியை மேற்கொள்ள வேண்டி யதிருந்தது. அதற்கு முந்தின இரவில் கிறிஸ்து சிலுவையோடு அவனுக்குக் காணப்பட்டதாகவும், **"இந்தச் சின்னத்தால் நீ வெற்றியடைவாய்"** என்ற வார்த்தைகளை அவன் கேட்டதாகவும், அவ்வாறே வெற்றி பெற்றதால் அவன் கிறிஸ்தவ னானதாகவும் சொல்லுகிறார்கள். அது உண்மையாயிருக்கலாம்.

ஆனால் ஒன்று தெளிவாய் விளங்குகிறது. 250 ஆண்டுகளாய் ரோமை அரசு தன் முழு வல்லமையை யும் பயன்படுத்தியும் கிறிஸ்து மார்க்கம் வளர்ந்து கொண்டே வருவதன் இரகசியம் என்ன என்பதை அவன் சிந்திக்கத் தொடங்கினான். அதை அறிந்து கொள்ள வேண்டும் என்னும் ஆர்வத்தோடு கிறிஸ்தவர்களுடன் சற்று தொடர்பு கொண்டான். அதன் மூலம் விக்கிரகாராதனைக்காரரான தன் குடிகள் உண்மையற்றவர்களும் நம்பப் படத்தகாதவர்களும் கலககுணமுள்ள வர்களுமாயிருப்பதையும், கிறிஸ்தவர் களோ தீங்கற்றவர்களும், சமாதானப் பிரியரும், முற்றிலும் நம்பப்படத்தக்க உண்மையுள்ளவர்களுமாயிருப்பதையும் கண்டு கொண்டான். ஆகவே பிறரிடம் இல்லாத ஏதோ ஒன்று கிறிஸ்தவர் களிடம் இருக்கிறது என்று கான்ஸ் டன்டைன் உணர்ந்தான். எனவே 313-ல் தன் குடிகள் தங்கள் விருப்பப்படி எந்த தேவனையும் வணங்கிக் கொள்ளலாம் என்று விளம்பரம் செய்தான்.

முந்திய அரசர்கள் சாம்ராஜ் யத்தை இணைத்துக்கட்ட விக்கிர காராதனையே ஏற்றது என்று நம்பிய தால் கிறிஸ்தவர்களை அழிக்கத் துணிந்தனர். இவனோ தன் பரந்த நாட்டில் ஒற்றுமையை உருவாக்க கிறிஸ்தவர்களின் மதமே உதவும் என்று கண்டு, கி.பி. 324-ல் பேய் வணக்கத்துக் கெதிரான சட்டம் ஒன்றை இயற்றிய தோடு, தன் நாடு முழுவதிலும் கிறிஸ்து மார்க்கத்தைப் பரப்பத்தக்கதாக உழைக்கவும் துணிந்து விட்டான். ஆயினும் இது வெறும் அரசியல் தந்திரமே. அவன் மதம் மாறியும் மனம் மாறவில்லை. அவன் மனந்திரும்பி இரட்சிக்கப்பட்டதாகவோ ஞானஸ் நானம் பெற்றதாகவோ எவ்வித ரேகையுமில்லை. **(மரணப் படுக்கையில் ஞானஸ்நானம் பெற்றதாக Gibbon என்னும் சரித்திராசிரியன் கூறுகிறான்.)** மேலும் பேய் வணக்கத்தின் பிரதான ஆசாரியனாகப் பெற்றிருந்த பட்டத்தை சாகுமளவும் அவன் விடவுமில்லை. ஆகவே, அவன் கிறிஸ்து சபைக்கும் பேய் வணக்கத் துக்கும் தலைவனாகவும் இரண்டையும் ஒன்றாய்க் கட்டி இணைக்கும் ஒரு மனிதனாகவுமே விளங்கினான்.

அரசாங்கத்தால் துன்புறுத்தப் பட்ட சபை இப்போது அரச ஆதரவையே அடைந்து விட்டது. பாபிலோன் மார்க்கத்தாரின் உயர்ந்த பதவிகளில் கிறிஸ்தவர்கள் அமர்த்தப் பட்டனர். விக்கிரக ஆலயங்கள் கிறிஸ்தவ ஆலயங்களாக மாற்றப் பட்டன. அங்குள்ள ஆசாரியர்களின் அலங்கார ஆடைகள் கிறிஸ்தவ ஊழியருக்கு அளிக்கப்பட்டதோடு அவர்கள் அரசாங்கச் சம்பளமும் பெற ஆரம்பித் தனர். உபத்திரவத்துக்குப் பதிலாக உன்னத பதவிகளும், எளிமைக்குப் பதிலாக ஆடம்பர வாழ்க்கையும், வறுமைக்குப் பதிலாகச் செல்வச் செழிப்பும் ஏற்பட்டன. வீடுகளில் கூடி ஜெபித்தவர்கள் அலங் காரமான ஆலயங்களில் அமர்ந்து ஆராதிக்க ஆரம்பித்தனர்.

அரச தயவை நாடியும், பதவி கள் நிமித்தமாகவும் சில வேளைகளில் பட்டயத்துக்குப் பயந்தும் மக்கள் ஞானஸ்நானம் பெற்றுக் "கிறிஸ்தவர் கள்" ஆக மாறினர். அறிவாளிகளான விக்கிரகாராதனைக்காரர், பூசாரிகள் முதலியோரிடம் சபைகள் ஒப்படைக் கப்பட்டன. அவர்களுக்கு மார்க்கத்தின் மூலோபதேசங்களே தெரியாது, ஆவி யோடு ஆராதிப்பதற்குப் பதிலாக மனதைக் கவரத்தக்க ஆராதனை ஒழுங் குகள் அமைக்கப்பட்டன. பாபிலோன் மார்க்கத்தின் முறைகளும், சடங்கு களும், மக்களின் விருப்பத்தை நிறைவேற்றவேண்டி சபைகளுக்குள் புகுத்தப் பட்டன.

ரோமாபுரியில் அலங்காரமான ஓர் ஆலயத்தில் சிறந்த சலவைக் கற்களால் அமைக்கப்பட்டு பொன் னாலும் விலையேறப்பெற்ற கற்க ளாலும் அலங்கரிக்கப்பட்ட மேடை மேல் அரசன் அமருவதற்காக சிறந்த சிங்காசனமொன்றும், அதன் முன்னால் சற்று தாழ்வாக ரோமாபுரி அத்தியட்சர் அமருவதற்காக இன்னொரு அழகிய சிங்காசனமும் அமைக்கப்பட்டன.

இவ்வாறாய் வழி தப்பிப்போன சபையில் பிலேயாமின் போதகமும் நிக்கோலாயரின் உபதேசமும் நுழைந் தது அதிசயமல்ல. பிரிந்து வாழ வேண்டிய தேவ ஜனம் மோவாபிய ரோடு கலந்துறவாடி தேவ கோபத்தால் அழிய வழி வகுத்ததே பிலேயாமின் போதனை. இக்காலத்தில் *(313 - 606)* சபைக்கு ஏற்பட்ட ஆபத்தும் இதுவே. சபை **(எக்ளீஸியா)** என்னும் கிரேக்க பதத்தின் கருத்து **"வெளியே அழைக்கப்பட்ட வர்கள்"** என்பதே. நமதாண்டவர் தமது சீஷரைப் பார்த்து நீங்கள் உலகத்தாரா யிருந்தால் உலகம் தன்னுடையதைச் சிநேகித்திருக்கும்; "நீங்கள் உலகத்தாரா யிராதபடியினாலும், நான் உங்களை உலகத்திலிருந்து *(பிரித்தெடுத்து)* தெரிந்து கொண்டபடியினாலும், உலகம் உங்களைப் பகைக்கிறது என்றார்" யோவா.*15:19.*

"உலகத்திலும் உலகத்திலுள்ளவை களிலும் அன்பு கூராதிருங்கள்; ஒருவன் உலகத்தில் அன்பு கூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை" என்பது கிறிஸ்தவனுக்குக் கொடுக்கப் பட்டிருக்கும் கண்டிப்பான கட்டளை யாகும் *1* யோவா. *2:15.* ஆகையால்தான் பூர்வ விசுவாசிகள் "பூமியின் மேல் தங்களை அந்நியரும் பரதேசிகளும் என்று அறிக்கையிட்டு குறைவையும் உபத்திரவத்தையும் துன்பத்தையும் அனுபவித்தார்கள். உலகம் அவர்களுக்குப் பாத்திரமாயிருக் கவில்லை" எபி.*11 :16,37,38.*

பெர்கமு காலக் கிறிஸ்தவர் களோ "ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கிய மேது? கிறிஸ்துவுக்கும் பேலியாளுக்கும் இசைவேது? அவிசுவாசியுடனே விசுவாசிக்குப் பங்கேது? தேவனுடைய ஆலயங்களுக்கும் விக்கிரகங்களுக்கும் சம்பந்தமேது?" என்பதை உணரவே யில்லை *2* கொரி.*6:14; 7:1.*

"நம்முடைய குடியிருப்பு பரலோகத்தில் இருக்கிறது" என்பதை *(பிலி.3:20)* மறந்து, உலகத்தையே தங்கள் நித்திய குடியிருப்பு என்று எண்ணி, உலக மக்களோடு மிஞ்சிய உறவு கொண்டனர். கிறிஸ்துவோடு உன்னதங்களில் உட்கார வேண்டிய சபை *(எபே.2:7)* உலகத்திலேயே படுத்துக் கொண்டது.

(4-ம் பக்கம் பார்க்க)

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பெர்கமு என்னும் பதம் "மணம் முடித்தவள்" என்னும் பொருள்படும். மகிமையின் மணவாளன் வந்தழைத்துச் சென்று மத்திய வானில் வைத்து மணம் முடித்துக் கொள்ளும் மகத்துவ நாள் மட்டும் மாசற்ற கன்னிகையாகத் தன்னைக் காத்துக் கொள்ள வேண்டிய சபை (2 கொரி.11:2) அழகும் புகழும் செல்வமும் செல்வாக்கும் சீரும் சிறப்பு முடையதாய்த் தோன்றிய ரோமை அரசாங்கம் என்னும் மணவாள னுக்குத் தன்னைக் கையளித்து விட்டதால் கிறிஸ்துவுக்கு துரோகம் செய்து வேசி யாகி விட்டது. இந்த சபைக்கு கான்ஸ் டன்டைன் அரசன் தேசீய சபை அல்லது சர்வலோக சபை என்ற கருத்துள்ள "கத்தோலிக்க சபை" என்ற பெயரைச் சூட்டினான்.

இக்காலத்தில் கிறிஸ்துவின் சபை ஆதி அப்போஸ்தல காலத்தை முற்றி லுமாய் மறந்து, பாபிலோன் மதத்தி லுள்ள சகல சடங்காச்சாரங்களையும் கடன் வாங்கி, சற்று மாற்றியமைத்து தனக்குச் சொந்த மாக்கிக் கொண்டது. முதன் முதலாவதாக 320-ல் ஆலயத்தில் மெழுகுவர்த்தி வைக்கும் வழக்கம் நுழைந்தது. அதைத் தொடர்ந்து ஏராளமான சடங்குகள் ஒவ்வொன் றாய் நுழையவே, கிறிஸ்து சபைக்கும் விக்கிரகாராதனைக்கும் வித்தியாசம் தெரியாமலாகி விட்டது.

பற்பல பண்டிகைகளைக் கொண்டாடி, புசித்து குடித்து வெறித்து பாடி ஆடி களித்த ரோமர், கிறிஸ்தவர் களுக்குப் பண்டிகைகளே இல்லாததால் சோர்படைந்தனர். அவர்களைத் திருப்திப்படுத்த பண்டிகை நாட்களை ஏற்படுத்தும் பிரச்சினை ஏற்பட்டது. சூரியன் தெற்கே சென்று மறைந்து, பின்பு வடக்கே திரும்பும் நாளாகிய டிஸெம்பர் 25-ம் தேதியை பாபிலோன் மதத்தவர் சூரிய தேவனின் பிறந்த நாளாய்க் கொண்டாடி வந்தனர். அந்நாளே கிறிஸ்து பிறப்பு பண்டிகைத் தினமாய் மாற்றப்பட்டது. (குளிர்கால மான டிஸெம்பரில் பலஸ்தீன மேய்ப்பர் தங்கள் மந்தைகளை வயல்வெளிகளில் தங்க வைப்பதில்லை. ஆகவே இயேசு டிஸெம்பரில் பிறக்கவேயில்லை என்று வேதசாஸ்திரிகள் சாதிக்கின்றனர்)

இன்றும், டிஸெம்பர் 25-ம் தேதியைத் தங்கள் ஆண்டவரின் பிறந்த தினமாக பயபக்தியுடன் கொண்டாடு கின்றனர் பலர். ஆனால் உண்மை எது? வருடத்தின் சகல நாட்களிலும் அந்த நாளைப் போல் கூடுதல் மதுபானம் செலவாகும் நாள் வேறு எது? அந்த நாளைப் போல் கூடுதல் ஆடு, மாடு, பன்றி, கோழி கொல்லப்படும் நாள் வேறு எது? அந்த நாளைப் போல் கிறிஸ்தவர்கள் (ஆடைகளுக்காக) கடன்படும் நாள் வேறு எது? பெர்கமு காலக் கிறிஸ்தவத்தின் பலன் இவை!

பாபிலோனிய மதத்தில் செமிராமிஸ் "தேவ மாதா", "பரலோக மாதா", "வானராக்கினி", "நித்திய கன்னிகை" என்னும் நாமங்களால் வணங்கப்பட்டாள். கிறிஸ்து சபையும் இயேசுவின் தாயை அதே நாமங்களால் வணங்கி, மரியாள் பெயராலும் பண்டிகை நாட்களை ஏற்படுத்திற்று.

செமிராமிஸ் சில இடங்களில் அஸ்ற்றாட்டி என்றும் அஸ்தரோத் என்றும் இஸ்டார் என்றும் அழைக்கப் படுவதுண்டு. அவள் பெயரால் மார்ச் மாதத்தை அடுத்து ஆறுவார நோன்பும் அதைத் தொடர்ந்து ஒரு பண்டிகை விருந்தும் பாபிலோனியருக்கு உண்டா யிருந்தது. அதை ஒட்டியே கிறிஸ்து சபையில் தபசு நாட்களும் உயிர்த் தெழுந்த பண்டிகையும் ஏற்படுத்தப் பட்டன. ஈஸ்டர் என்பது இஸ்டார் என்னும் அஸ்தரோத் தேவியின் பெயரின் மறுபெயரேயன்றி வேறல்ல.

பெர்கமு கால சபையில் நிக்கொலாயரின் உபதேசமும் அதிக தீமையை உண்டு பண்ணி விட்டது. சபை ஊழியர் அரச ஆதரவையும் அரசாங்க சம்பளத்தையும் பெற்று செல்வாக்கடைந்து, சபைகளை ஆளுகை செய்யும் தலைவர்களாய் மாறிவிடவே, சபைகளுக்குள் ஒரு அரசியல் சூழ்நிலை உருவாகி விட்டது. சங்கங்களும் சட்ட திட்டங்களும் அதிகாரங்களும் ஆளுகைகளும் ஏற்பட்டன. சபை ஆவியானவரால் ஆளப்படுவதற்குப் பதிலாக சட்டங்களால் ஆளப்படும் ஒரு ஸ்தாபனமாக மாறிற்று.

அதோடு பட்டம் பெற்றவர் கள், பட்டம் பெறாதவர்கள் என்கிற ஒரு பெரிய பிரிவினையும் இக்காலத்தில் ஏற்பட்டதே. தற்காலத்தைப்போல் வேதபுத்தகங்கள் இல்லாத அக்காலத் தில், சபையின் மக்களும் பட்டம் பெற்றவர்களுக்கு மட்டும் தான் தெய்வீக அறிவோ அனுபவமோ அதிகாரமோ உண்டு என்று நம்பி அஞ்சி அடிபணிந்தனர்.

நமதாண்டவர் "பூமியிலே ஒருவனையும் உங்கள் பிதா என்று சொல்லாதிருங்கள்; பரலோகத்திலிருக் கிற ஒருவரே உங்களுக்குப் பிதாவாயி ருக்கிறார். நீங்கள் குருக்கள் என்றும் அழைக்கப்படாதிருங்கள்; கிறிஸ்து ஒருவரே உங்களுக்குக் குருவாயிருக் கிறார்" என்று திட்டவட்டமாய் கட்டளை கொடுத்திருந்தும் (மத்.23:9,10) தேவ ஊழியர் தங்களைப் "பிதாக்கள்" என்றும் "குருக்கள்" என்றும் அழைக்கத் தலைப்பட்டார்கள், தங்கள் ஆண்ட வரின் கட்டளையைத் தாங்கள் மீறுவதாக அவர்கள் உணரவேயில்லை.

வேதபுத்தகத்தில் ஒரே ஒரு இடத்தில் தேவனை பற்றிப் "அவரு டைய நாமம் பரிசுத்தமும் பயங்கரமு மானது" (Holy and REVEREND is His name) என்று எழுதப்பட்டிருக்கிறது சங்.111 :9. இந்தப் போதகர்கள் இதே அடை மொழியை (Rev.) தங்கள் பட்டப் பெயராய்த் தரித்துக் கொண்டனர். சிலரோ இதுவும் போதாதென்று தங்களுக்கு மகா பயங்கரமானவர் என்னும் பட்டத்தையும் சூட்டிக் கொண்டனர். இவ்வாறாகத் தங்களை தேவனுக்குச் சமமானவர்களாகவும், தேவனைக் காட்டிலும் பெரியவர் களாகவும் பாவித்துக் கொண்டனர். சிலர் "ஆண்டவர்" என்றே அழைக்கப் பட்டனர். தேவனுக்குச் சமமானவர் களாய்க் கருதப்பட்ட இவர்களுக்குச் சபையார் அடிபணிந்தது அதிசயமல்ல; ஆனால் சபையின் தலைவரான கர்த்தரோ கோபமடைந்து "நீ மனந் திரும்பு, இல்லாவிட்டால் நான் வந்து என் வாயின் பட்டயத்தால் அவர்க ளோடே யுத்தம் பண்ணுவேன்" என்றார் 2:16.

இக்காலத்தைக் குறித்த உவமை மத்.13:31,32-ல் காணப்படுகிறது. "பரலோக ராஜ்யம் கடுகு விதைக்கு ஒப்பாயிருக்கிறது. அதை ஒரு மனுஷன் எடுத்து தன் நிலத்தில் விதைத்தான், அது சகல விதைகளிலும் சிறியதாயிருந் தாலும் வளரும் போது சகல பூண்டு களிலும் பெரிதாகி ஆகாயத்துப் பறவைகள் அதன் கிளைகளில் வந்து அடையத்தக்க மரமாகும்" என்றார்.

இங்கு "**பரலோகராஜ்யம்**" என்னும் பதம் "வெளிப்படையான கிறிஸ்தவம்" என்னும் கருத்துடையது. இந்த விதை (அடைக்கப்பட்ட) தோட்டத்தில் (உன்.4:12) போடப்படுவதற்குப் பதிலாய் "நிலத்தில்" போடப்பட்டது. நிலம் உலகம் 13:38. மேலும் கடுகு ஒரு சாதாரண செடி; அது ஆகாயத்துப் பறவைகள் வந்தடையத்தக்க ஒரு பெரிய மரமாவதென்றால் அது இயற்கைக்கு மாறானதே. இது கான்ஸ்டன்டைன் காலத்தில் சபைக்கு ஏற்பட்ட அசாதாரண வளர்ச்சியைத் தான் காண்பிக்கிறது. சபை ஆவிக்குரிய தாயிருந்தும், உலகத்தில் அமர்ந்து, உலகத்தில் வேரூன்றி, உலகத்தைப் பற்றிப் பிடித்து உலகத்தின் பெலத்தால் நிலைநின்று உலகத்தின் ஜீவனை உறிஞ்சி அசாதாரண வளர்ச்சியை அடைந்து விட்டது.

இங்கு "பறவைகள்" சாத்தானின் சேனையைத் தான் குறிக்கும் 13:4,19 பார்க்க. அவை சுயநலத்தோடு மட்டுமே நிழலுக்காகவும், கனிகளுக்காகவும் மரத்தில் வந்தடையும். அரசதயவையும் உத்தியோகத்தையும் எதிர்ப்பார்த்து, விக்கிரகாராதனைக் காரரான ஏராளம் மக்கள் இக்காலத்தில் சபையில் அடைக் கலம் புகுந்தனர். இப்பறவைகளால் மரம் அசுத்தமடைவது போல, இந்தப் பேர்க் கிறிஸ்தவர்களால் சபை முற்றிலும் கறைப்பட்டு சீர்கெட்டு விட்டது. அந்த நிலைமை இன்று வரையிலும் தொடர்ந்து கொண்டே தான் இருக்கிறது.

இருபதாம் நூற்றாண்டு கிறிஸ்தவ சபையே, உன் உண்மை நிலையை நீ சரியாய் அறிந்து கொள்வா யானால் நலமாயிருக்கும். நீ, திசை தவறியதை அறியாமல் மறைந்திருக்கும் பாறைக்கு நேராய்த் தீவிரிக்கும் கப்பல் போலிருக்கிறாயே! உனக்குள்ளிருக்கும் கோடிக்கணக்கான மக்கள் அக்கரை சேரலாம் என்று நம்பிக் கொண்டே நடுக்கடலில் மடியப் போகின்றனரே! நீ நான்காம் நூற்றாண்டிலேயே திசை தப்பி விட்டாய். உன்னை நம்பியி ருக்கும் மக்களின் ஆத்துமாக்களைக்

(5-ம் பக்கம் பார்க்க)

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

குறித்த உன் உத்தரவாதத்தை உணருகிறாயா?" நாங்கள் என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்கும் மக்களுக்குப் பேதுரு அப்போஸ்தலன் கொடுத்த ஆலோசனையைத் தெளிவாய் விளக்கிக் கொடுக்கிறாயா? அப்.2:33-40. "**அதிக ஆக்கினையை அடைவோம் என்று அறிந்து உங்களில் அநேகர் போதகராகாதிருப்பீர்களாக**" யாக்.3:1.

சபையைக் கட்டிப்பிடித்துக் கொண்டிருக்கும் கிறிஸ்தவனே, உன் சபைப் பக்தி உன்னைப் பரலோகம் கொண்டு சேர்க்கும் என்று எண்ணிக் கொண்டிருந்து ஏமாந்து போகாதே. உன் சபை விழுந்து போனது. பிசாசோடும் உலகத்தோடும் உறவு கொண்டு புறக்கணிக்கப்பட்டது. அதன் உபதேசங்கள் பாபிலோன் உபதேசத்தின் கலவை, களங்கமற்ற தேவ வசனத்துக் கொத்தவையல்ல. உன் ஆண்டவரின் ஆசீர்வாதம் "ஜெயங் கொள்ளுகிறவனுக்கு" - தனி மனிதருக்கே வாக்களிக்கப்பட்டிருக்கிறது. உன் வாழ்க்கையில் வெற்றி உண்டா? தினந்தோறும் பிசாசு, மாம்சம், லோகத்தின் மேல் ஜெயங் கொள்ளுகிறாயா? 2:17.

ஜெயங்கொள்ளுகிறவனுக்கு இரண்டு ஆசீர்வாதங்கள் வாக்களிக்கப்படுகின்றன. ஒன்று "**மறைவான மன்னா**". "நம்முடைய பிதாக்கள் வனாந்தரத்தில் மன்னாவைப் புசித்தார்களே" என்றவர்களிடம் இயேசு "என் பிதா வானத்திலிருந்து வந்த மெய்யான அப்பத்தை உங்களுக்குக் கொடுக்கிறார்... ஜீவ அப்பம் நானே, என்னிடத்தில் வருகிறவன் ஒருக்காலும் பசியடையான்" என்றார் யோவா.6:31-35. இந்த இயேசுவை உலகம் அறியவில்லை; ஆகவே அவர் உலகத்துக்கு மறைவான மன்னா. இந்த இயேசு உன் ஜீவனாய் உனக்குள்ளே வசிக்கிறாரா? "கிறிஸ்து எனக்கு ஜீவன்" என்றும், "நான் அல்ல கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்" என்றும் நீ சொல்லக் கூடுமா? பிலி.1:21; கலா.2:20.

இரண்டாவது ஆசீர்வாதம் வெண்மையான குறிக்கல்லும், அதில் எழுதப்பட்ட புதிய நாமமுமாகும். பரீட்சையில் வெள்ளைக்கல் வெற்றியையும் கறுத்தக்கல் தோல்வியையும் காண்பிக்கும். குற்றவாளிக்கு வெள்ளைக்கல் விடுதலைக்கும் கறுத்தக்கல் ஆக்கினைக்கும் அடையாளமாகும். ஒரு வெள்ளைக்கல் இரண்டாய் உடைத்து ஒரு பகுதியில் தன் பெயரை எழுதிக் கொடுத்தால் அதன் கருத்து "நானும் நீயும் ஒன்று, உன் எந்த ஆபத்திலும் நான் உனக்கு உதவி செய்வேன்" என்பதே.

கிறிஸ்தவ வெற்றி என்னும் ஒன்றையே இலக்காய்க் கொண்டு, கொடிய துன்பங்களையும் தொல்லைகளையும் பொறுமையாய்ச் சகித்துக் கொண்டு முன்செல்லும் கர்த்தருடைய பிள்ளையே, உன் ஆண்டவர் உன்னைப் பார்த்து "பயப்படாதே, நான் உன்னோடிருக்கிறேன் என்கிறார்". இது உனக்குப் போதாதா?

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அளிக்கிறார். நமது அனைத்து சபை செயல்களிலும் வல்லமையை அளித்து வேதவசனம் நம்மிலிருந்து வெளிப்பட உதவி செய்கிறார். உத்தம பக்தர்கள் இயேசுவிலும், இயேசு அவர்களிலும் வாழ்வதைக் காணலாம். ஒரு சபையில் கிறிஸ்து இருக்கும் போது அது சந்தோஷமும், தூய்மையும், வல்லமையும், வெற்றியுமுடையதாயிருக்கும். எனவே அவரைப் பார்த்து, "எங்களோடு தங்கியிரும். சபையாகிய எங்களுக்கு நீரே ஜீவனும் மகிழ்ச்சியுமாயிருக்கிறீர். நீர் எங்களோடு இல்லாவிட்டால் எங்களுக்கு எங்கள் மகிமை எடுபட்டுப் போகும். உமது பிரசன்னமின்மை எங்களுக்கு வெட்கமாயிருக்கும்" என்று சொல்லுவோம்.

ஆபத்து

லவோதிக்கேயா சபையின் நிலை ஆபத்தானது. முதலாவது அது கிறிஸ்துவால் புறக்கணிக்கப்படுகிறது. "உன்னை என் வாயினின்று வாந்தி பண்ணிப் போடுவேன்" என்ற துக்கமான நிலையைப் பார்க்கிறோம்.

மேலும் இத்தகைய சபை நிர்பாக்கியமுள்ளது. மகிழ்ச்சியற்றதும், பிரிவினையுள்ளதும் தேவ பிரசன்ன மற்றதுமான ஒரு நிலை இங்கு காணப்படுகிறது. மேலும் உயிரற்றதும், ஆவியற்றதும், வறட்சி நிறைந்ததும், கிருபையற்றதும், தவறான போதனை நிறைந்ததுமான நிலை இதில் காணப்படும்.

மட்டுமின்றி பரிதபிக்கப்படத்தக்க ஒரு நிலையில் அது காணப்படுகிறது. ஒரு காலத்தில் மகிமையுடன் விளங்கிய சபை இன்று வெட்கத்துடனிருக்கிறது. வாழ்த்தப்படுவதற்குப் பதிலாக பரிதாபப்பட வேண்டிய நிலையும் புகழப்படுவதற்குப் பதிலாக கடிந்து கொள்ளப்பட வேண்டியதும் ஏற்படுகிறது.

மேலும் தரித்திர நிலையும் காணப்படுகிறது. அங்கத்தினரின் குறைவு, ஜெபத்தாழ்ச்சி, வரங்கள் கிருபைகள் யாவற்றிலும் தாழ்ச்சி காணப்படும். ஏதோ சிலர் செழிப்புடன் காணப்படுவதாகத் தோன்றலாம். ஆனால் மொத்தத்தில் சபை வெறுமையாகவும், கிறிஸ்துவின் ஜீவனற்றதாகவும் காணப்படும். பீடத்திலிருந்து வரும் செய்தி பதராகவும் சபை லௌகீகம் நிறைந்ததாகவும், சபையார் மாயையின் கூட்டமாகவும் காணப்படுவர்.

மட்டுமன்றி அவர்கள் பார்வையிழந்தவர்களாயிருப்பதால் பிறரைக் கண்டு கொள்ள மாட்டார்கள். நன்மை செய்ய முடியாதவர்களாகவும், கிறிஸ்துவின் வருகையைக் காணக்கூடாதவர்களாகவும் அவரது மகிமையை காண முடியாதவர்களுமாயிருப்பர்.

இறுதியாக அவர்கள் நிர்வாணிகளாக்கப்படுகின்றனர். அவர்களை அனைவரும் வெட்கத்தோடு பார்க்க வேண்டியதாகும். மக்களின் வாயில் அவர்கள் பழமொழியாவார்கள். "இதுவா ஒரு சபை?" என்று சிலரும், "இதுவா இயேசு கிறிஸ்துவின் சபை?" என்று இன்னும் சிலரும் கேட்பார்கள்.

இந்நிலையில் சபை ஜெயம் கொள்ள முடியாது. ஜெயம் கொள்ளுபவர்களுக்கு சிங்காசனத்தில் இடமுண்டு. கலாத்தியரைப் பார்த்து பவுல், "நீங்கள் நன்றாய் ஓடினீர்களே சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமற் போக உங்களுக்குத் தடை செய்தவன் யார்?" என்று கேட்கிறார் கலா.5:7. இந்த நிலையில் தேவன் அவர்களைத் தள்ளி விட்டு பிறரை பயன்படுத்துவார்.

நிவாரணங்கள்

நீங்கள் நியாயந்தீர்க்கப்படாத படிக்கு உங்களை நீங்களே நிதானித்து அறியுங்கள். உங்களில் சிலர் வெதுவெதுப்பான நிலையில் இருக்கிறீர்கள்.

சபையின் உண்மை நிலையைக் குறித்து இயேசு தெளிவாகக் கண்டு பிடிக்கிறார். "நீ வெதுவெதுப்பாயிருக்கிறாய்... நீ நிர்ப்பாக்கியமுள்ளவனும், பரிதபிக்கப்படத்தக்கவனும், தரித்திரனும், குருடனும், நிர்வாணியுமாயிருக்கிறாய்". நாம் எப்படிப்பட்டவர்களாயிருக்கிறோம் என்பதை ஆண்டவர் நமக்கு வெளிப்படுத்தட்டும். நாம் இருக்கிற நிலையை விட்டு மனந்திரும்ப வேண்டும்.

அருத்தபடியாக அவரது கிருபையுள்ள ஆலோசனை

நீ ஐசுவரியவானாகும்படிக்கு நெருப்பிலே புடமிடப்பட்ட பொன்னை வாங்கும் படியான ஆலோசனை இது. ஏசா.55:1-ம் வசனம் இதற்கு இணையாயிருக்கிறது. "...நீங்கள் வந்து பணமுமின்றி விலையுமின்றி திராட்சரசமும் பாலும் கொள்ளுங்கள்" ஏசா.55:1.

ஆக வெதுவெதுப்பான நிலைக்கு நிவாரணம் நாம் முதலில் ஆரம்பித்தது போல மறுபடியும் ஆரம்பிக்க வேண்டும். நாம் நன்றாக உடுத்தியிருக்கிறோமென்று எண்ணினாலும் நாம் நிர்வாணிகள் தான். நாம் அவரிடம் திரும்பி அவரது கிரயத்தால் நமக்கு வாங்கிக் கொடுக்கப்பட்ட அவரது சொந்த நீதியாலான அவரது ஆவியாலான நன்மையான ஆடையையும் அழகாக நமக்கு உடுத்து விப்பார். நமது கண்களின் பார்வை குன்றிப் போனபடியால் தேவனுடைய முகத்தைப் பார்க்க முடியாமலும் அவரது மகிமையைக் கண்டு கொள்ள முடியாமலும், பாவிகளைக் கண்ணீரோடு பார்க்கக் கூடாமலும் இருப்பதால் ஒரு முறை கூட நமது கண்களைத் திறக்கும் படி கேட்போம். அவருடைய அன்பு குறையவில்லை. நாம் அவரை விட்டு அலைந்து சென்றாலும் அவரிடம் செல்லும்படி அழைக்கிறார். அவர் நமது தேவைகளை சந்திக்கிறவர்.

பின்வாங்கிப் போனவர்களுக்கான மிக நல்ல நிவாரணம் கிறிஸ்துவோடுள்ள அதிகப்படியான உறவாகும். "இதோ நான் வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்". இது மனந்திரும்பாதவர்களுக்குக் கொடுக்கப்படும் அழைப்பு

(6-ம் பக்கம் பார்க்க)

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

அல்ல. சபைக்குக் கொடுக்கப்படும் அழைப்பு. கிறிஸ்து சபைக்கு வெளியே துரத்தப்பட்டுள்ளார். சபை இரக்கமின்றி அவரைத் துரத்தினாலும் அவர் வெகு தூரம் செல்லவில்லை. அவர் சபையை நேசிப்பதால் அதை முற்றும் விட்டுவிட மனமற்றவராக திரும்பி வரும்படி வாசலண்டை நிற்கிறார். சபை தன் பழைய நிலைக்கு வர அவர் திரும்பி வர வேண்டும். சபையை ஆசீர்வதிக்க விரும்பும் அவர் காத்துக் கொண்டே நிற்கிறார். கதவைத் தட்டிக் கொண்டு நிற்கிறார். பல பிரசங்கங்கள் மூலமாக வும், மனச்சாட்சியின் உறுத்தல்கள் மூலமாகவும், தூய ஆவியானவரின் ஏவுதலின் மூலமாகவும் தட்டிக் கொண்டு நிற்கிறார். பல்வேறு விதங்களில் சபையை விழிப்படையச் செய்யப் பேசுகிறார். சபையின் செயலால் அதை வாந்தி பண்ணி விடுவேன் என்றவர், நம்மை விட்டுப் போய் விடாமல் கிருபையினால் நம்மை நேசித்து நம் இருதயக் கதவைத் தட்டுகிறார்.

நம்மிடம் வந்து நம்மோடு போஜனம் பண்ணுவது அவரது விருப்பம். அவர் நம்மோடு போஜனம் பண்ணினால் நமது வெதுவெதுப்பான நிலை அகன்று போகும். இயேசுவோடு வாழுகிறவர்களின் இருதயங்கள் கொழுந்து விட்டு எரியும். இயேசுவோடு வாழ்ந்து அவரிடம் கற்றுக் கொள்பவர் கள் இந்த ஆசீர்வாதத்தைப் பெறுவர். இயேசுவோடுள்ள உறவில் வளருங்கள்.

ஒவ்வொருவரும் கிட்டிச் சேர வேண்டும்

இதுவே நான் இறுதியாகக் கூறும் வார்த்தை நாம் நம்மையே சோதித்து கிருபையில் குறைந்திருப்போமானால் நமது குறைகளை அறிக்கையிட வேண்டும். ஒவ்வொருவரும் தங்களுக் காக ஜெபிக்க வேண்டும். கதவைத் திறக்க வேண்டியது சபையல்ல, "ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு கதவைத் திறந்தால்" தனி நபர்கள் சரிப்படும் போது சபை சரிப்படும். ஆண்டவருடைய அன்புக் கும் சேவைக்கும் நாம் திரும்பிச் செல்ல அவரது கடிந்து கொள்ளுதலை கவனிக்க வேண்டும். அவரது கரங்களைப் பிடித்துக் கொண்டு, என் ஆண்டவரே! என் தேவனே! எனக் கதற வேண்டும். அவிசு வாசமுள்ள தோமா தன் விரல்களை ஆண்டவரின் ஆணி பாய்ந்த கரங் களிலும் தன் கையை அவரது குத்தப் பட்ட விலாவிலும் இட்ட பின்பு உறுதி யான விசுவாசியாகி விட்டான். ஆண்டவரோடு நெருங்கி வரும் போது அவர் நம்மை ஆசீர்வதிப்பார். எனவே அனுதினமும் அவரோடு நெருங்கிப் பழகுங்கள். அவரை விட்டு தூரம் போகாதிருங்கள்.

முக்கிய அறிவிப்பு

10-ம் தியதிக்குள் பத்திரிகை வரக் தவறினால் உடனே தகவல் தாருங்கள்.

Mobile : **95432 21008**

Whatsapp : **94897 40295**

e-mail:varukayinthoothan@hotmail.com

ஓட்டத்தில் உறுதி

Staying the course

Lois J. Stucky (1928 - 2014)

நமது ஆண்டவராகிய இயேசு சிலுவையில் '**முடிந்தது**' யோ.9:30 என்றார். தேவ திட்டத்தின்படி அவர் வந்த நோக்கம் நிறைவேறிவிட்டது. அவர் கடைசி மட்டும் உறுதியாயிருந்து தனக்கு நியமிக்கப்பட்ட ஓட்டத்தை முடித்தார். அவர் சம்பாதித்த மீட்பைக் குறித்து நாம் நன்றியுடையவர்கள்.

அப்போஸ்தலனாகிய பவுல், "ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன்" 2 தீமோ.4:7 என்றார். அவர் கடந்த பாதை கரடு முரடாகவும், ஆபத்து நிறைந்ததாகவும் இருந்தாலும் அவர் தமது ஓட்டத்தை சந்தோஷமாக முடித்தார். அவருக்கு ஒரு திட்டமான நோக்கமிருந்தது. அதை அவர் நிறைவேற்ற முன்னேறினார்.

ஒப்பிட்டுப் பார்க்கும் போது நமது பாதை ஆண்டவராகிய இயேசு வின் பாதை, பவுல் அப்போஸ்தலனின் பாதை ஆகியவற்றை விட முக்கியமற்ற வைகளாயிருக்கலாம். ஆனால் கடைசி மட்டும் ஓடி முடிக்கவும் 1 பேது.1:4-ல் கூறப்பட்ட அழியாததும் மாசற்றதும், வாடாததுமான சுதந்தரத்தைப் பெற வேண்டும். முக்கியமாக பிதாவுக்கும், குமாரனுக்கும், நித்திய காலமாகப் புகழ்ச்சி ஏற்படவும், அவரது கிருபையும் மகிமையும் வெளிப்படவும் விரும்ப வேண்டும்.

நமது விருப்பப்படி நாம் ஓடக் கூடாது. தேவ சித்தம், விருப்பம் ஆகிய வற்றின்படி அவரது நடத்துதலை நம்பி ஓட வேண்டும். தவறேயில்லாமல் வழி காட்டும் நூலாக அவர் அருளிய வேத புத்தகமும், தூய ஆவியானவரும் காட்டும் பாதையில் செல்ல வேண்டும். கீழ்ப்படிந்தால் உலக பாதையை விட்டு விலகி நேராக ஓட முடியும்.

எப்போதும் ஜெபம் பண்ண வேண்டும்

எபேசி.6:18.

ஓட்டத்தில் உறுதியாயிருப்ப தற்கு மிகவும் ஏதுவாயிருப்பதும், அதே வேளையில் மிகக் கடினமாயிருப்பதும் ஜெபம் என்றால் தவறல்ல. கெத்ச மெனேயின் உச்ச கட்ட நேரத்தில் ஆண்டவராகிய இயேசு, சீஷரிடம், "நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள் என்றார்" மத்.26 :41. ஜெபம் இன்றியமை யாதது. ஆனால் நாம் அதில் தவறி விடுகிறோம். பின்பு வெட்கமின்றி "மாம்சம் பெலவீனமானது" என அறிக்கை யிடுகிறோம். ஒரு பயங்கரமான விரோதி ஒவ்வொரு தருணத்தையும் பயன்படுத்தி ஜெபம் பண்ணாமல் தடுத்து விடுகிறான். தேவன் இதில் நம் பங்கை நிறைவேற்ற உதவி செய்யட்டும். திட்டமான நோக்கத்தோடும், சுய தியாகத்தோடும், உறுதியான முயற்சியோடும் தூய ஆவியானவரின் உதவியை நாடி ஜெபிக்க வேண்டும். "பலத்தினாலுமல்ல, பராக்கிர மத்தினாலுமல்ல, என்னுடைய ஆவியி னாலேயே ஆகும்" என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் சக.4:6.

இந்த கடைசி நேரத்தில் தேவ னோடு போராடுவோம். நமது குடும்பங் களுக்காகவும், சபைகளுக்காகவும், தேசத் திற்காகவும் ஜெபிப்போம். தேவன் பெரிய காரியங்களைச் செய்வார். "**ஆண்டவரே உமது கிரியையை உயிர்ப்பியும்**" ஆப.3:2 என்று அனுதினமும் ஜெபிப்போம். உலகமெங்கும் தேவன் தமது ஆவியான வரை ஊற்றும்படியாகவும், திரள் கூட்ட மான மக்கள் இரட்சிப்புக்குள் கொண்டு வரப்படும்படியாகவும் அதன் மூலம் அவர் நாமம் மகிமைப்படும்படியாகவும் ஜெபிப்போம்.

தேவ அன்பின் முழுமை

The fullness of God's Love

Adolph Saphir

நமது இரட்சகராகிய இயேசு நமது ஆண்டவராகவும் தேவனுமாகவும் தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார். நீங்கள் இயேசுவின் சகோதரரும் பிதாவின் பிள்ளைகளும் இராஜ்யத்தின் சுதந்தரவாளிகளுமாயிருக் கிறீர்கள். நீங்கள் அவரை தரிசிப்பீர்கள், இயேசுவானவரை அவர் இருப்பது போல கண்டு அவரைப் போல ஆவீர்கள் என்ற நம்பிக்கையில் வாழ்கிறீர்களா? இந்த நம்பிக்கையின் அடிப்படையில் அவர் பரிசுத்தராயிருப்பது போல உங்களையும் பரிசுத்தமாய் வைத்திருக் கிறீர்களா? தேவ அன்பிலே வாழுங்கள். தேவ அன்பின் மேலே வாழுங்கள். தேவ அன்பிலிருந்து வாழுங்கள். இயேசுக் கிறிஸ்துவின் காணப்பட்ட தேவ அன்பின் பரிபூரணத்திலிருந்து ஆரம்பம் செய்யுங்கள். சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கிற இரத்தத்தையே நோக்கிப் பாருங்கள். ஜீவனைக் கொடுக்கும் இயேசுவின் அன்பை இராப் போஜனம் மூலம் வெளிப்படுத்தும் போது தமது மரணத்தின் மூலம் தமது பணியை முடித்து இரட்சிப்பை முழுமையாக்கினார். அவர் முழுமையும், போதுமானதுமான பாவ நிவாரணத்தைச் செய்து விட்டார் என்று நான் உலகுக்கு காண்பிக்கிறேன் என்று சொல்லிக் கொள்ளுங்கள். கிறிஸ்து இவ்வுலகில் வந்து சிலுவையிலறையுண்டு மரித்து, உயிரோடு எழுந்ததை விசுவாசிக்கிற நாம் கிறிஸ்துவின் சரீரமாகவும் அவரோடு நித்திய காலம் ஒன்றாகவுமிருக்கிறோம். தேவனுடைய அன்பிலிருந்து நம்மைப் பிரிப்பவன் யார்? நமக்காக மரித்தவர் உன்னதமான தேவனுடைய குமார னல்லவா!

இக்கடைசி நாட்களில் உத்தமமாயிருப்போம்

Faithful in these last days

Rich Carmicheal

நாட்கள் கடினமாகி வரும் போதும், நமது விசுவாசத்திற்கு எதிரான அழுத்தம் அதிகரிக்கும் போதும், நாம் முடிவு மட்டும் உண்மையாயிருக்க அழைக்கப்படுகிறோம். நாம் தேவனுக்கும் அவரது வசனத்திற்கும், வழிகளுக்கும், அவரது பணிக்கும் உத்தமமாயிருக்க வேண்டும். "நீ மரண பரியந்தம் உண்மையாயிரு. அப்பொழுது ஜீவ கிரீடத்தை உனக்குத் தருவேன்" என்பது நமக்குக் கொடுக்கப்பட்ட வாக்கு வெளி.2:10

பவுல் அப்போஸ்தலன் உத்தம சேவை செய்த வல்லமையான ஒரு மாதிரி. "ஏனென்றால் நான் இப்பொழுதே பானபலியாக வார்க்கப்பட்டுப் போகிறேன் நான் தேகத்தை விட்டுப் பிரியும் காலம் வந்தது. நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன். இது முதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது. நீதியுள்ள நியாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்" 2 தீமோ.4:6-8.

கர்த்தருடைய பணியில் உத்தமம்

உத்தமமாயிருந்து ஓட்டத்தை நன்றாய் முடிப்பதற்கு நமது கடமைகள், தாலந்துகள், பொறுப்புகள் போன்றவற்றில் உத்தமம் அவசியம். "**உக்கிராணக்காரன் உண்மையுள்ளவனென்று காணப்படுவது அவனுக்கு அவசியம்**" 1கொரி.4:2. **சேவையிலும், ஜீவியத்திலும் உத்தமம், உண்மை வேண்டும் -** நெகே.13:14, கொலோ.1:7;4:7; **ஜெபத்தில் -** ரோம.12:12; **பிறருக்கு அன்பு காட்டுவதில் -** 3 யோவா.1:4; **சாட்சியில் -** வெளி.2:13; **கொடையில் -** 1 கொரி.16:2, 2 நாளா.31:12; **தேவ வசனத்தைப் பகிர்ந்தளிப்பதில் -** எரே.23:28; 1 பேது. 4:10,11.

"எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று" என்று பேதுரு வற்புறுத்துகிறார். இந்தக் கடைசி நாட்களில் விழித்திருந்து ஜெபிக்கவும், ஊக்கமாய் அன்பு செலுத்தவும், தேவன் தந்திருக்கும் கிருபைக்கேற்றபடி உண்மையுள்ள உக்கிராணக்காரராயிருக்கவும் 1 பேது.4:7,11 வசனங்களின்படி இயேசு கிறிஸ்து மூலமாக தேவன் மகிமைப் படும்படி நமது இயலுக்கேற்றபடி ஊழியம் செய்வோம்.

"கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து நீங்கள் உறுதிப்பட்டவர்களாகவும், அசையாதவர்களாகவும், கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக" 1 கொரி. 15:58. அப்படியானால் ஒரு நாளில் "உத்தமும் உண்மையுமுள்ள ஊழியக்காரரே ....." மத்.25:21 என்று அழைக்கப் படுவீர்கள்.

"நன்மை செய்வதில் சோர்ந்து போகாதிருப்போமாக., நாம் தளர்ந்து போகாதிருந்தால் ஏற்றகாலத்தில் அறுப்போம்" கலா. 5:9. நமது பரம பிதாவும் இவ்வுலகில் கிரியை செய்து கொண்டிருக்கிறார் யோவா.5:17. கடைசி நாட்களில் நல்ல அறுவடையைப் பெற்றுக் கொள்ள அவர் விரும்புகிறார். "எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும் அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்" 1 தீமோ.2:4. "...ஒருவரும் கெட்டுப் போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்". 2 பேது.3:9. இழந்து போன அனைவரும் மனந்திரும்பி, பாவங்கள் கழுகப்பட்டு, அவரது சன்னிதானத்தில் வரவேண்டும். நம்மைச் சுற்றி வாழும் மக்கள் மீதும் அவர் உருக்கமுடையவர், அவரோடு வயல் நிலத்தில் உழைக்க நம்மை அழைக்கிறார். "அறுப்பு மிகுதி வேலையாட்களோ கொஞ்சம்... அனுப்பும்படி வேண்டிக் கொள்ளுங்கள்" மத்.9:37-38.

கிறிஸ்து சபையை நேசித்து அதன் மீது எழுப்புதலை ஊற்ற ஆயத்தமாயிருக்கிறார் எபே.5:25-27 படிக்க. தன்னை ஆயத்தம் பண்ணின சபையை சேர்த்துக் கொள்ள அவர் மறுபடியும் வருகிறார் வெளி.19:7. நமது அன்பையும், அர்ப்பணிப்பையும் புதுப்பித்து கிறிஸ்துவின் சரீரத்தைக் கட்டி எழுப்புவதில் உற்சாகங் கொள்ளுவோம். அவர் வருகையை எதிர்பார்த்திருக்கும் நாம், நமது கரத்தில் ஒப்படைக்கப்பட்ட தேவ பணியினை முழுமனதோடு செய்வோம்.

ஆங்கிள்சீயின் பிரசங்கியான ஒற்றைக் கண்ணையுடைய கிறிஸ்மஸ் ஈவான்ஸ்

Christmas Evans The one-eyed preacher of Anglesea

James Gilchrist Lawson

கிறிஸ்மஸ் ஈவான்ஸுக்கு வேல்ஸ் நாட்டின் ஜான் பனியன் என்ற பெயரும் உண்டு. இவர் 1766-ம் ஆண்டு கிறிஸ்மஸ் தினத்தில் பிறந்தார். அவரது பெற்றோர் மிக ஏழைகள் தமது 9-வது வயதில் தந்தையை இழந்த அவர் 6 ஆண்டுகள் ஒரு கொடூரமான சிற்றப்பனுக்கு (அங்கிளுக்கு) கடின வேலை செய்தார். அவர் படிக்க முடியவில்லை. எனவே 17-ம் வயதில் எழுத்துக்களை வாசிக்க முடியாதவராயிருந்தார்.

அவருடைய வாழ்வு விபத்துகளும், கடின அனுபவங்களும் நிறைந்த தாயிருந்தது. ஒரு முறை ஒரு சண்டையில் அவர் குத்தப்பட்டார். இன்னொரு முறை தண்ணீரில் ஏறக்குறைய மூழ்கி விட்டார். ஒரு முறை கையில் உருவின ஒரு கத்தியோடு ஒரு உயர்ந்த மரத்திலிருந்து கீழே விழுந்தார். மேலும் ஒரு முறை அவர் ஏறியிருந்த குதிரை ஒரு தாழ்ந்த ஓடுங்கிய பாதை வழியாக முட்டி மோதி வேகமாகச் சென்றது. அவர் மனந்திரும்பிய பின்பு தேவனற்ற சில தோழர்கள் இரவில் கடத்திச் சென்று இரக்கமின்றி அடித்ததின் விளைவாக ஒரு கண்ணை இழந்தார். ஆனாலும் இந்த எல்லா சோதனைகளிலும் தேவன் இரக்கமாக அவரைப் பாதுகாத்தார்.

17-வது வயதில் தன் கொடூர எஜமானை விட்டு அவர் வெளியேறினார். விரைவில் ஒரு எழுப்புதல் கூடுகையில் கலந்து கொண்டு சபை அங்கமானார். இளமையிலே பல மார்க்க அழுத்தங்கள் அவரில் ஏற்பட்டாலும் தமது 17-வது வயதில் தான் கிறிஸ்துவுக்காக வாழத் தீர்மானித்தார். இப்போது எழுத, வாசிக்கக் கற்றுகொள்ள மனதை விருத்தி பண்ணினார்.

இயேசுவின் இரண்டாம் வருகையைக் குறித்த ஒரு சொப்பனத்தைக் கண்டு, ஊழியத்திற்கான அழைப்பினைப் பெற்றார். ஆரம்பத்தில் பிரசங்கித்த போது தனது வாழ்வு ஒரு பாவம் நிறைந்த மூட்டை என உணர்ந்தார். பிறருடைய ஜெபங்களையும், பிரசங்கங்களையும் மனப்பாடம் செய்து ஜெபிக்கவும் பிரசங்கிக்கவும் ஆரம்பித்தார்.

1970-ம் ஆண்டில் அவர் அபிஷேகிக்கப்பட்டு எளிய சபைகளில் இளம் மிஷனெறியாக அமர்த்தப் பட்டார். அவர் மூலம் மக்கள் தேவனிடம் வருவதைக் கண்டு முதலில் ஆச்சரியமடைந்தார். ஆண்டவர் அவரையும் அவரது கூடுகைகளையும் ஆசீர்வதித்து அனேக மக்களை மந்தையில் சேர்த்தார். தென் வேல்ஸ் முழுவதும் கால்நடையாய்ப் பிரயாணம் பண்ணினார். சில வேளைகளில் ஒரு ஞாயிற்று கிழமைகளில் 5 முறை பிரசங்கித்ததுமுண்டு. அவர் ஆடை அணிந்த விதம் அழகாயிருக்கவில்லை. ஆனால் மக்கள் கூட்டம் கூட்டமாக அவரது செய்தியினைக் கேட்க வந்தனர். அவர்கள் கண்ணீரோடும் புலம்பலோடும் கடந்து சென்றனர்.

தமது 26-வது வயதில் அவர் ஆங்கிள்சீ எனப்பட்ட தீவின் சபைகளில் பிரசங்கிக்க ஆரம்பித்தார். இங்கு அனேக சபைகள் தவறான உபதேசத்திற்கு அடித்துச் செல்லப்பட்டிருந்தன.

(8-ம் பக்கம் பார்க்க)

உங்கள் கவனத்திற்கு

நீங்கள் கடிதம், காணிக்கை அனுப்பும் ஒவ்வொரு கடவையும், உங்கள் பத்திரிக்கை பதிவு எண், தொலைபேசி எண் இரண்டையும் கட்டாயம் எழுதுங்கள்.

(மாதிரிக்காக) **வாசகர் ஒருவரின் முகவரி**

NI 1279 (பதிவு எண்)
Mr. Giftson Samuel
NIMS HOUSE Plot A12
Bindavan colony, Kapura & P.O
Vyara, Tapt Dt, Gujarat
Pin Code - 394 655
Cell: 94438 45402 (தொலைபேசி எண்)

(7-பக்கத் தொடர்ச்சி)

அதற்குத் தலைவராயிருந்தவர் மிக புத்தி மானும் மற்றும் கலாச்சார பேச்சாளரு மான ஒருவராயிருந்தார். கிறிஸ்மஸ் ஈவான்ஸ் பல வருடங்கள் அவருக்கு எதிராகப் பிரயாசத்துடன் பிரசங்கித்து அவரது போதனைகளை எதிர்த்தார்.

தேவனோடு நெருங்கிய உறவினை நாடினார்

இந்த எதிர்ப்பு ஜெப ஆவியின் இனிமை கிறிஸ்தவ வாழ்விற்கு இன்றியமையாதது என்ற உணர்வுக்கு அவரை கொண்டு வந்தது. தேவனோடு இன்னும் நெருங்கிய உறவு வேண்டும் என்ற வாஞ்சையும் ஏற்பட்டது. அந்தப் பூரணமான கிறிஸ்தவ அனுபவத்தை அவர் பெற்றதைக் குறித்து இவ்வாறு குறிப்பிடுகிறார்:

"நான் மிகவும் சோர்ந்து போன வனாகவும், கிறிஸ்துவின் பாவ நிவாரண பலியைக் குறித்தும் அவரது ஆவியைக் குறித்தும் குளிர்ந்த எண்ணமுடையவ னாகவுமிருந்தேன், பீடத்தில் நிற்கும் போதும் தனி ஜெபத்திலும், வேத வசனத்தை வாசிப்பதிலும் குளிர்ந்த நிலை காணப்பட்டது. 15 ஆண்டுகளுக்கு முன்பாக என் இருதயம் இயேசுவோடு எம்மாவூருக்குச் சென்ற சீஷரைப் போல கொழுந்து விட்டு எரிந்து கொண்டி ருந்ததை எண்ணிப் பார்த்தேன். ஆனால் மறக்க முடியாத ஒரு நாள் வந்தது.

நான் டால்ஜெல்லி என்ற இடத்திலிருந்து மச்சின்லெத் என்ற இடத்திற்குப் பிரயாணம் பண்ணி காடெய்ற் இட்லிஸுக்கு நேராக ஏறிக் கொண்டிருந்தேன். அப்போது எனது கட்டுகள் விழுந்து போவது போலவும், மலைகளின் பனி என்னில் உருகிப் போவது போலவும் உணர்ந்தேன். தூய ஆவியானவரின் வாக்கில் உறுதி பெற்றேன். எனது முழு ஆவியும் மிகப்பெரிய கட்டிலிருந்து விடுபடுவது போன்ற உணர்வு ஏற்பட்டது. கண்ணீர் கட்டுக் கடங்காமல் வெளியேற நான் சத்தமிட்டு தேவனுடைய சந்திப்புக்காக ஜெபித் தேன். இரட்சிப்பின் சந்தோஷத்தையும், ஆங்கிள்ஸு சபை மக்கள் சந்திக்கப்படும் படியாகவும் ஜெபித்தேன்".

"எனது பராமரிப்பில் அடங்கி யிருந்த அனைத்து சபைகளுக் காகவும், வேல்ஸ் நாட்டின் பெரும்பாலான பிரசங்கிமாருக்காகவும் பெயர் பெயராக ஜெபித்தேன். இவ்வாறு 3 மணி நேரம் கடந்தது. அழுது புலம்பி என் சரீரம் பெலவீனமடைவது வரை கடல் அலை போல ஒன்றன்பின் ஒன்றாக எண்ணங் கள் வந்து கொண்டிருந்தன. இவ்வாறு என்னையும் எனது சரீரம், ஆத்துமா, தாலந்துகள், உழைப்புகள், வாழ்வு, ஒவ்வொரு நாள், ஒவ்வொரு மணி நேரம் எனக்கு மீந்திருந்த யாரையும் எனது கவலைகளையும் கிறிஸ்துவின் வரங் களில் ஒப்படைத்து விட்டேன்".

ரஸ்தா மலைப்பாங்கானதாகவும் தனிமையானதாகவுமிருந்தது. தேவ னோடு போராட எந்தத் தடையுமிருக்க வில்லை. இந்த சம்பவம் தேவனுடைய நற்குணத்தைப் பற்றிய புதிய வெளிப் படுத்துதலை எனக்கும், சபைக்கும் அளித்தது. இவ்வாறு தீய போதனை களிலிருந்து நானும் ஆங்கிள்சியா சபை யாரும் தப்புவிக்கப்பட்டோம். முன்பு என்னில் காணப்பட்ட பாவிகளின் மனந் திரும்புதலுக்கான வாஞ்சை, போராட்ட ஜெபம் ஆகியவை மறுபடியும் வாழ்வில் திரும்பி வந்தன. தேவ வார்த்தையைப் பற்றிக் கொண்டேன்.

அதன் விளைவாக நான் வீடு திரும்பிய போது ஆங்கிள்சியா மக்களி லும் ஜெப ஆவி கிரியை செய்வதைக் கண்டேன். குறிப்பாக இரு மூப்பர்கள் தேவன் இரக்கமாக மக்களை சந்திக்க வேண்டுமெனவும் பாவிகள் மனந்திரும்ப தேவ கிருபை வெளிப்பட வேண்டு மெனவும் ஜெபித்துக் கொண்டிருந்தனர்.

இந்த சூழலில் கிறிஸ்மஸ் ஈவான்ஸ் ஒரு 'உத்தம உடன்படிக் கையை தேவனோடு' என்ற நூலை எழுதினார். ஒவ்வொரு தலைப்பின் கீழும் அவர் தமது முதல் எழுத்துக்களால் ஒப்பிட்டார். ஒரு நூலில் 'அன்பினால் நோய்ப்பட்ட இருதயத்தை எனக்குத் தா' என்று எழுதினார். நான் பிரசங்கிக்கு முன்னே உமது வசனத்தின் வல்லமையை நான் உணரட்டும். மோசே தரையிலும் தண்ணீரிலும் அற்புதங்களைச் செய்யு முன் தனது கையிலிருந்த கோலின் வல்லமையை அறிந்து கொண்டவ னல்லவா! இயேசு கிறிஸ்துவின் விலை யேறப் பெற்ற இரத்தத்தின் மூலம் இதைத் தாரும் என்று எழுதியிருக்கிறார்.

இவ்வாறு தன்னை முழுவதுமாக தேவனுக்காக அர்ப்பணித்து பின்பு தூய ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்ற பின்பு புதிய அபிஷேகத்தோடும் வல்லமை யோடும் அவர் பிரசங்கிக்க ஆரம்பித்தார். ஆங்கிள்சியா மற்றும் வேல்ஸ் முழுவதும் எழுப்புதல் பரவியது. அவர் '**அன்பான வயது முதிர்ந்த கிறிஸ்மஸ்**' என்று சாதாரணமாக அழைக்கப்பட்டார். தனது முதிர்ந்த வயதில் ஜூலை 23, 1838-ல் தன் உதடு களில் வெற்றியின் பாடலோடு சந்தோஷ மாக இவ்வுலக ஓட்டத்தை முடித்தார்.

மகிமையான சுவிசேஷம் ஒப்படைக்கப்பட்டுள்ளது

Entrusted with the glorious gospel

Lois J. Stucky

தமது கிருபை, இரக்கம், இரட்சிப்பு ஆகியவற்றால் நம்மை திரளாக ஆசீர்வதித்த தேவனைத் துதிக்க நாம் கடமைப்பட்டவர்கள். பூமியின் கோடிக்கணக்கான ஆத்துமாக்கள் விசாலமான பாதையாகிய அழிவின் பாதையில் சென்று கொண்டிருக் கிறார்கள். ஆனால் நாம் தேவனுக்கு முன்பாக நம்மைத் தாழ்த்தி மனந்திரும்பி, மகிமையான சுவிசேஷத்தை விசுவாசித்து இரட்சிக்கப்பட்டு நித்திய ஜீவனுக்குப் பங்காளிகளாயிருக்கிறோம். ஆகவே பவுல் கேட்டது போல நாமும் நடுங்கித் திகைத்து ஆண்டவரே நான் என்ன செய்ய சித்தமாயிருக்கிறீர் என்று கேட்க வேண்டும் அப். 9:6.

இந்த நெருக்கடியான காலத்தில் அவருடைய சித்தத்தையும் திட்டங்களையும் நிறைவேற்றுகிற மக்களை தேவன் தேடிக் கொண்டிருக்கிறார். நமது அன்பும் தெய்வீகத் தன்மையுடைய வருமான தலைவனாகிய இயேசு நமக்கு அளித்த அழைப்பின் பணியை முடிக்க நம்மை அர்ப்பணிப்போம். இராஜாதி இராஜாவும் அன்பின் அரசரும், நீதியின் அரசருமாகிய அவருடைய ராஜ்யத்தை நிலைநாட்ட முன் வருவோம்.

நமது பரலோக அரசருக்கு பிரகாச முகத்துடனும், முழு இருதயத்துடனும், பயபக்தியுடனும் பின் செல்லுவோம். நமது ஆதி அன்பில் நடந்து பணி செய்வோம். அது நமது ஆண்டவரும் இரட்சருமாகிய அவருக்கு விலையேறப் பெற்றது. நாம் அதிலிருந்து விழுந்து நியாயத்தீர்ப்புக்கு ஆளாகக் கூடாது. (வெளி.2:4,5)

எனவே சுயநலத்தை விட்டு விட்டு தியாகத்தோடு அவருக்காகவும், அவருடைய ராஜ்யத்திற்காகவும் வாஞ்சையோடு வாழுவோம். அவரது தூய நித்திய சுவிசேஷத்தை அறிவிக்க நம்மிடம் ஒப்புவித்த தேவனுக்கு உண்மையுள்ளவர்களாயிருப்போம்.

Contact:

VARUKAYIN THOOTHAN
7, Newport Street, W.C.C. Road,
Nagercoil - 629 001.
Kanyakumari District,
SOUTH INDIA.

Mobile: +91 095432 21008
Whatsapp: +91 094897 40295
email: varukayinthoothan@hotmail.com

சிந்தனைக்கு

சபையைக் கட்டிப்பிடித்துக் கொண்டிருக்கும் கிறிஸ்தவனே, உன் **சபைப்** பக்தி உன்னைப் பரலோகம் கொண்டு சேர்க்கும் என்று எண்ணிக் கொண்டிருந்து ஏமாந்து போகாதே.

சபை விழுந்து போனது. பிசாசோடும் உலகத்தோடும் உறவு கொண்டு புறக்கணிக்கப் பட்டது. அதன் உபதேசங்கள் பாபிலோன் உபதேசத்தின் கலவை, களங்கமற்ற தேவ வசனத்துக் கொத்தவையல்ல.

தான் ஜசுவரிய சம்பன்னனென்று எண்ணும் **சபை**யின் நிலை தேவ பார்வையில் வெறுமையானது.

தனி ஜெபத்தில் குறைவு, **சபை**யின் பெலவீனம், என கிறிஸ்துவோடுள்ள ஐக்கியம் குறைவுபடும் போது மார்க்கத்தின் **உயிர்** இழந்து போகிறது.

சில விருப்பங்களை **சபை** விட வேண்டும். நிர்விசாரம் **சபை**களை விழச் செய்கிறது. லௌகீக பேச்சாளர்கள் மக்களை இரையாக்குகிறார்கள்.

மக்கள் **பாவ** இன்பங்களையும் **பரிசுத்த** வாழ்வின் கனத்தையும் ஒரே வேளையில் அனுபவிக்க விரும்புகிறார்கள்.

Printed and Published by Wesley Devadason and Printed at Varukayin Thoothan Offset Press and Published at 3/8, Newport Street, Nagercoil - 629 001.
Editor : Wesley Devadason